திரு. நா. வீராசாமி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே. நம்முடைய சட்டமன்ற விதி 35 (2)

'If on a question being called, a member in whose name it stands is absent, the Speaker at the request of any member direct that the answer to it be given'

என்று இருக்கிறது. ஒரு முக்கியமான கேள்வி—787 கிட்னி பாங்க் பற்றியது. அதைப்பற்றி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வியைக் கொடுத்திருந்த திரு. பரந்தாமன் அவர்கள் அவையில் இல்லை. ஆகவே, துணைக்கேள்வி யாரும் கேட்கவில்லை என்று கருதி, வேறு கேள்விக்கு சென்றுவிட்டோம். அது முடிந்து, வெகுநேரமாகிவிட்டது. இப்போது அதைப்பற்றிக் கேட்க வாய்ப் பில்லை. இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

ரெங்கசமுத்திரி அணை

* 790 வினா.—**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை பகுதி மக்களுக்கு பயனளிக்கக் கூடிய ரெங்க சமுத்திரி ஏரி அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ரெங்கசமுத்திரி ஏரித் திட்டம் ஏற்கெனவே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அது இப்போது பரிசீலனையில் இல்லை என்றால் பரிசீலனையே கைவிடப் பட்டதா? கைவிடப்பட்டதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ரெங்கசமுத்திரி ஏரித் திட்டத்தின் கீழ் இப்போது 92 ஏக்கர் ஆயக்கட்டு இருக்கிறது. அதற்கு போதுமான அளவு தண்ணீர் இல்லை. ஆகவே, மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி கைவிடப்பட்டது.